## ‘திராவிட மாடல்’ அரசில் – நமது முதலமைச்சரின் சீரிய தலைமையில்

# கைத்தறித் தொழிலில் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது!

## சட்டப்பேரவையில் – கைத்தறித்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில்– பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் ஆர்.காந்தி பெருமிதம்!

**சென்னை, மார்ச் 31-**

**சட்டப்பேரவையில், கைத்தறித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் ஆர்.காந்தி, “திராவிட மாடல் அரசியல் - நமது முதலமைச்சரின் சீரிய தலைமையில், கைத்தறித் தொழிலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் ஆர்.காந்தி ஆற்றிய உரை வருமாறு:-

கைத்தறி நெசவுத் தொழில் உலகின் மிகப் பழமையான தொழில்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் கைத்தறி இரகங்கள் உலக புகழ் பெற்றவை ஆகும். காலம், காலமாக கைத்தறி நெசவாளர்கள், தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் உருவாக்கும் அடையாளமாக இருந்து வருகின்றனர். 1951 ஆம் ஆண்டு, தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டில், பேரறிஞர் அண்ணா அவர்களால், பார்டர் போட்ட வேட்டியும், பார்டர் போட்ட சேலையும் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டும் என அன்றைய அரசின் கவனத்திற்காக, தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. 4.1.1953 அன்று, கைத்தறி நெசவாளர் ஆதரவு நாள் என்று அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்து, திருச்சியில் அறிஞர் அண்ணா அவர்களும், சென்னையில் கலைஞர் அவர்களும், கைத்தறி ஆடைகளை வீதி, வீதியாக தோளில் சுமந்து விற்பனைச் செய்தார்கள். நெசவாளர்களின் துயர் துடைக்க, அறிஞர் அண்ணாவும், டாக்டர் கலைஞர் அவர்களும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் போராடியதன் விளைவாகத்தான் நெசவாளர்களின் வாழ்வில் வசந்தம் ஏற்பட்டது. அவர்கள் செய்த சாதனைகளைத் தொடர்ந்து, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நெசவாளர்களுக்கு பல சாதனைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்கிற நமது திராவிட மாடல் அரசு, முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ், கைத்தறி தொழிலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன், முதன்முறையாக கைத்தறி நெசவாளர்களுக்கு 1.1.2022 முதல் basic Wagesல் 10%, D.A.ல் 10% என கூலி உயர்வு வழங்கப்பட்டது. மேலும், ஆண்டுதோறும் 10% கூலி உயர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இது, முன் எப்போதும் இல்லாத திராவிட மாடல் ஆட்சியின் சாதனை ஆகும்.

**தள்ளுபடி மானியம்!**

2021-2022 ஆம் ஆண்டுக்கு முன்னர், கடந்த ஆட்சிக் காலத்தில் நிலுவையாக இருந்த தள்ளுபடி மானியத் தொகை ரூபாய் 160 கோடியினையும் சேர்த்து, கடந்த

4 ஆண்டுகளில், கழக ஆட்சிக் காலத்தில், ரூ.1,010.11 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதனால் 850க்கும் மேற்பட்ட கைத்தறி சங்கங்கள் பயனடைந்துள்ளன.

**வேட்டி-சேலை திட்டம்!**

2023 ஆம் ஆண்டில்அதற்கு முன்னர் நீங்கள் பார்த்தீர்க ளென்றால், இந்த வேட்டிசேலையை யாருமே use செய்ய மாட்டார்கள். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர்தான், நாம் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து, இன்றைக்கு, சேலைகளில் 15 New designsம், வேட்டிகளில் 7 New designsம் மாற்றியிருக்கிறோம். இன்றைக்கு பொதுமக்கள் மத்தியில் அமோக வெற்றி பெற்று வருகிறது.

பொங்கல் 2024. வருவாய்த் துறைக்கு 31.12.2023க்குள் வழங்கப்பட்டுவிட்டது.

இது 16 ஆண்டுகளில் இல்லாத சாதனை ஆகும். மேலும், கடந்த ஆட்சியில் விட்டுச்சென்ற நிலுவைத் தொகை ரூ.148.71 கோடி நமது கழக ஆட்சியில் விடுவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பொங்கல் 2025. 27.8.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இந்த ஆண்டு late ஆக அரசாணை வெளியிடப்பட்டாலும், சேலை & வேட்டி உற்பத்தி முழுவதும் முடிக்கப்பட்டு, Tamil Nadu Civil Supplies Corporation மூலம் வழங்கப்பட்டது.

பொங்கல் 2026 திட்டத்திற்குத் தேவையான மொத்த தொகை ரூ.673 கோடி முழுவதும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிச் சீருடைத் திட்டம்!**

2021-2022 ஆம் ஆண்டு, நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி ரூபாய் 75 இலட்சம் கூடுதல் செலவினத்தில் உயர்த்தப்பட்டது. 2024-2025 ஆம் ஆண்டில், முன் எப்போதும் இல்லாமல், முதன்முறையாக, ஜூன் மாதத்தில் 2 set uniform துணிகள் சமூக நலத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2025-2026 ஆம் ஆண்டுக்கு 23.10.2024 அரசாணை வெளியிடப்பட்டு, ஏப்ரல் மாதத்திற்குள் 2 set வழங்கப்படும். ஜூன் மாதத்திற்குள், 4 set முடிக்கப்படும்.

**சிறிய அளவிலான கைத்தறி பூங்கா (Mini Handloom Park)**

தமிழ்நாட்டில், 10 இடங்களில் தலா ரூபாய் 2 கோடி செலவில் அமைக்கப்படுகிறது. இந்த Mini Handloom Park அமைப்பது குறித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கமே, இதை ஆரம்பித்ததேநெசவாளர்களுக்கெல்லாம் கூலி மிகவும் குறைவு. எனவே, அவர்கள் minimum கூலி ரூ.800/க்குமேல் பெற வேண்டுமென்பதற்காகத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சித் தலைவர் அவர்களால் Mini Handloom Park அறிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டில்,

10 இடங்களில் தலா ரூபாய் 2 கோடி செலவில் அமைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 2 இடங்களில் பூங்காக்கள் துவக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 பூங்காக்கள் துவக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த வணிக வளாகம்! (Unity Mall)**

எக்மோரில் நீங்கள் பாருங்கள். நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இப்போது அங்கிருந்த கடைகளையெல்லாம் இடித்துவிட்டு, Unity Mall கிட்டத்தட்ட 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4.5 இலட்சம் சதுரடி பரப்பளவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29 12025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

Unity Mallல் உள்ள வசதிகள். Tamil Nadu Shops 41 Nos, Other State Shops 36 Nos, Design Studio, Lounge & Reception, Cooptex Head Office, Car Parking 600 Nos. இதுவரைக்கும் இல்லாத அளவிற்குஇன்னும் ஒன்றரை வருடம் கழித்து நீங்கள் அதைப் பார்த்தீர்களென்றால், அடையாளமே தெரியப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம்!**

அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம். இது 2010ல் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது. ஆனால், 10 ஆண்டுகளில் அவர்கள் அதை என்னவென்றே கண்டுகொள்ளவில்லை. நம்முடைய தலைவர் அவர்கள்

ஆட்சி பொறுப்பேற்றவுடன், இப்பூங்காவில் 2021ல் பணிகள் துவக்கப்பட்டன. தற்போது, 10 work shed முடிக்கப்பட்டு, 720 கைத்தறிகள் நிறுவப்பட்டு, 1,000 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பூங்காவிற்கு, 2912025 அன்று, ஒன்றிய அரசின் ஜவுளித் துறை செயலாளர் Smt. Neelam Shammi Rao அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். Central Government லிருந்து வந்து ஆய்வு செய்தார்கள். இந்தமாதிரி அவர்கள் எங்கேயும் பார்க்கவில்லை. ஆய்வு செய்த பின்னர் நன்றாக இருக்கிறது என்று சொன்னார். இந்தப் பூங்காவை பார்த்துவிட்டு, இந்தியாவிலேயே முதல் பட்டுப் பூங்கா மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது என்று பாராட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, நிலுவைத் தொகை அங்கிருந்து நமக்கு வர வேண்டும்.

அதுபோனவுடன், 3.2.2025 அன்று ரூபாய் 9 கோடியே 90 இலட்சத்தை உடனே release செய்தார்கள்.

**ஆரணியில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா!**

இது 20 ஏக்கர் 53 cent நிலப்பரப்பில் ரூபாய் 44.69 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். DPR தயார் செய்யப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு, அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்ற உடனே பணிகள் துவக்கப்படும்.

**ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கு அரசு மானியம் வழங்குதல்!**

Tamil Nadu New Integrated Textile Policy, 2019ல் அறிமுகம் செய்யப்பட்டது. ஜவுளித் தொழில் முனைவோரிடம் இருந்து மானியம் பெற, எந்தவொரு proposalம் பெறப்படவில்லை. யாரும் வரவில்லை. கழக ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன், ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கு போதிய awareness ஏற்படுத்தி, தற்போது விசைத்தறிகளை நவீனப்படுத்த 10 percent அரசு மானியத் தொகை 109 ஜவுளி நிறுவனங்களுக்கு ரூ.61 கோடியே 52 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**விலையில்லா மின்சாரத் திட்டம்!**

விலையில்லா மின்சாரத் திட்டத்தினை நெசவாளர்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்களால் 2006 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. நமது தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், கைத்தறிக்கு 200லிருந்து 300ஆகவும், powerlooms க்கு 750லிருந்து 1000ஆகவும் உயர்த்திக் கொடுத்தவர்தான் நமது தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்!**

ஒன்றிய அரசின், வீடு கட்டும் திட்டத்தின் கீழ்,



ஒரு வீடு கட்டுவதற்கு ரூ.2 இலட்சத்து 10 ஆயிரம் முதல் ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் மட்டுமே மானியம் வழங்கப்படும். இதை நாங்கள் சொன்னோம். நமது தலைவர் அவர்கள் நெசவாளர்களுக்கு ஒவ்வொன்றையும் சிந்தித்து சிந்தித்து அதைச் சொன்னால் ஏற்றுக்கொள்கிறார். அது correct என்பதைக் கேட்டு, சிந்தித்துச் செயல்படுகிறார். நாங்கள் சொன்னோம், அதற்கான காரணத்தை Finance Departmentல் கேட்டார்கள். எதற்கு அதிகமாக கேட்கிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். தற்போது அதை ரூ. 4 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள். இன்றைக்கு நெசவுத் தொழில் செய்கிறவர்கள் ஒரு பள்ளத்தில் இருக்கிறார்கள். வீடு இல்லாமல் இருக்கும். மழைகாலத்தில் தண்ணீர் வரக்கூடும். அந்த வீட்டைக் கட்டினால் அதற்கு அதிகமாக செலவாகும். மேலே கட்டினால் அதற்கு ரூ.4 இலட்சமாக உயர்த்திவிட்டார்கள் நமது தலைவர் அவர்கள். 332023 அன்று ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நகர்புறங்களில் இதுவரைக்கும் 815 நெசவாளர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. 548 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதற்கு ரூ.21 கோடியே 83 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் 2,996 பயனாளிகளுக்கு “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ், ஒப்பளிப்பு பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் permanent staff 1,033 நபர்கள் இருந்தார்கள். 31.5.2022 முதல் 15 percent ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. temporary staff 406 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் 27.6.2022ல், permanent செய்யப்பட்டனர். தற்போது, தகுதி பெற்றுள்ள, 361 தற்காலிக பணியாளர்களும் தற்போது ஆண்டில், பணி நிரந்தரம் செய்யப்பட உள்ளனர். அவர்களுக்கும் பணி நிரந்தரம் செய்யப்படும். இதுவரைக்கும் எப்போதும் நடக்காதது இந்த ஆட்சியில் நடைபெறுகிறது.

அதேபோல், சங்கங்களில் பணியாற்றும் MD சம்பளம்; உங்களுக்குத் தெரியும் Societiesல் வேலை செய்வதற்கு அங்கே MD ஒருவர் இருப்பார். Government தரப்பில் இருப்பார். அவருக்கு யார் சம்பளம் கொடுப்பது என்றால் அந்த society காரர்கள்தான் கொடுக்க வேண்டும். அந்த society காரர்களுக்குக்கூட நமது தலைவர் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், தவறுகள் நடக்கும், அவருக்கு செலவு வைக்கக்கூடாது, எதுவும் நேர்மையாக நடக்க வேண்டும் என்று சொல்லி அவர்கள் கொடுக்க வேண்டாம். நாம் அந்த MDக்கு சம்பளம் கொடுப்போம் என்று சொல்லி, ரூ.1.15 இலட்சம் மாதச் சம்பளம் வழங்கியிருக்கிறார். அந்த சம்பளத்தை 15.12.2022 முதல் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இது எங்கேயும் இல்லை. இதுபோன்று சிந்தித்து யாரும் செய்வதில்லை.

**நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம்!**

அதேபோல, நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம், நமது ஆட்களுக்குக்கூட நிலைமை என்னவென்று தெரிகிறது. இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிப்படி நடத்துவது உலகத்தில் யாராலும் முடியாது. நான் challenge செய்கிறேன். காரணம் நிதிநிலை எப்படி இருக்கிறது என்று ஒவ்வொருவருக்கும் தெரியும். ரூ.1,000லிருந்து ரூ.1,200 ஆக உயர்த்தியவரும் நமது தலைவர் தான். ஆட்சிக்கு வந்தவுடன் ரூ.1,000லிருந்து ரூ.200ஆக உயர்த்தி, இன்றைக்கு ரூ.1,200 வழங்குகிறார். அதனால் கிட்டத்தட்ட 28,907 OAP பணியாளர்கள் பயன்பெறுகிறார்கள். Family Pension பயனாளிகள் 1,183 ஆகும்.

**Weavers Savings & Security Scheme (SSS);**

இன்னொன்று Weavers Savings & Security Scheme (SSS); அதில் குறைந்தபட்சம் அவர்கள் செலுத்திய தொகையினை மீண்டும் வாங்குவதற்கு 25 வருடங்கள் ஆகும். நமது தலைவர் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், 25 ஆண்டுகள் வேண்டாம் என்று சொல்லி, 20 ஆண்டுகளாக 5.7.2023 முதல் குறைக்கப்பட்டு, 47,919 நெசவாளர்கள் பயன் அடைகின்றனர். ஒவ்வொன்றையும் அப்படிச் செய்தார்கள்.

**ஈமச் சடங்கு!**

ஈமச் சடங்கில் இதற்கு முன்பு நெசவாளர்கள் மரணம் அடைந்தால் ரூ.2,000 கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதை ரூ.5,000 ஆக மாற்றியவர் நமது முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அது 2952023 அன்றுமுதல் உயர்த்தப்பட்டது.

**Special Medical Camps**

டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 161 சிறப்பு மருத்துவ முகாம்கள் மாநில முழுவதும் நடத்தப்பட்டு, 46,059 நெசவாளர்கள் பயன் பெற்றுள்ளார்கள். கழக ஆட்சி பொறுப்பு ஏற்ற உடன் முதன்முறையாக, மாநில அளவிலான Young Designers Award வழங்க 2022-23 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. அது என்னவென்றால் முதல் பரிசு ரூ.1,00,000/ இரண்டாம் பரிசு ரூ.75,000/ மூன்றாம் பரிசு ரூ.50,000/.

கல்லூரி மாணவர்களின் சிறந்த வடிவமைப்புகளுக்கு, 2 ஆண்டுகளுக்கு, 18.4.2023 & 25.9.2024 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், Young Designers Award பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

**Buyer Seller Meet**

சென்னை, புது டில்லி, பெங்களூரு மற்றும் விஜயவாடா ஆகிய 4 பெரு நகரங்களில், Buyer Seller Meet நடத்தப்பட்டது. ரூ.60 கோடிக்கு, MoU போடப்பட்டு உள்ளது. Vijayawadaவில், 2.1 2.2025 அன்று நடைபெற்ற Buyer Seller Meetல் Andhra மாநிலத்தின் APCO, Jharkand மாநிலத்தின் JharKraft ஆகிய நிறுவனங்களுடன் MoU போடப்பட்டு உள்ளது.

**மாநில அளவிலான 4 சிறப்பு கைத்தறி கண்காட்சி!**

திருச்சி, சேலம், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 நகரங்களில், Handloom Expo நடத்தப்பட்டு, ரூ.3.36 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளது. நடப்பு ஆண்டில், 3,000 கைத்தறி நெசவாளர்களுக்கு, ரூபாய் 3 கோடி மதிப்பில், தறிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு உள்ளது. நெசவாளர்களுக்கு, பிற மாநில நெசவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, Exposure Visit ரூபாய் 50 லட்சத்தில் செயல்படுத்தப்பட்டது.

**விசைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம்!**

இதுவரையில் நானும் பார்த்துவிட்டேன், இதுவரையில் விசைத்தறிகளுக்கு, budgetல் நிதி கொடுத்தது கிடையாது. இதுதான் fisrt time 50 கோடி ரூபாய் ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த Budgetல் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைவருமே பாராட்டினார்கள். 3,000 சாதா விசைத்தறிகளை, நவீன விசைத்தறிகளாக மேம்படுத்த, நடப்பு நிதி ஆண்டிற்கு, ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதி அதிகரிக்க, Powerloom Clustersல், தறி கூடங்கள், பொது வசதி மையம் மற்றும் Quality Testing Lab அமைக்க, ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, Working Capital Loan வழங்கிட ரூபாய் 10 கோடி Corpus Fund வழங்க நடப்பு நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**கோஆப்டெக்ஸ்**

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, கோஆப்டெக்ஸ்ல் நீங்கள் பார்த்தீர்களென்றால், மொத்தம் 150 கடைகள் இருக்கிறது என்று அன்றைக்குக்கூட நான் சொன்னேன். தமிழ்நாட்டில் 106 கடைகள், பிற மாநிலங்களில் 44 கடைகள் இருக்கிறது. நாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடனே— அந்த ஆட்சியில் 7 கோடியே 61 இலட்சம் lossல் இருந்தது. முதல் வருடமே அந்த 7 கோடி loss போய், 9 கோடியே 49 இலட்சம் இலாபத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் பார்த்தீர்களென்றால், மொத்தம் பார்த்தீர்களென்றால் 17.10 கோடி இலாபத்தில் இருக்கிறது.

அதேமாதிரி, 2022-23 ஆம் ஆண்டு total profit 16 கோடியே 67 இலட்சம். அதில் net profit 11.57 கோடி ஆகும். இப்போது showroom Modernization செய்திருக்கிறோம். இப்போது 54 programme செய்திருக்கிறோம், அதற்கு 2.90 கோடி ரூபாய் செய்யப்பட்டுள்ளது. Showroom Rental Arrears, Government கட்டவேண்டிய நிறைய பணம், நாங்கள் வந்தபிறகு எங்கேயும் பாக்கியில்லாம் கட்டினோம். அதனால் 16.67 இலட்சம் total profit.

2023-24ல் total Profit 11 கோடியே 79 இலட்சம். Net profit 9 கோடியே 53 இலட்சம். Showroom Modernization 2 கோடியே 26 இலட்சம் ஆகும். 2024-25 total Profit 17 கோடியே 11 இலட்சம், Net Profit (Tentative) 5 கோடி. Showroom Modernization 3 கோடியே 61 இலட்சம். Staff salary Arrears நாங்கள் 8 கோடியே 50 இலட்சம் கொடுத்தோம். அதேமாதிரி விற்பனை என்று பார்த்தீர்களென்றால் 2021-2022ல் 171 கோடியே 90 இலட்சம், 2022-2023ல் 200 கோடியே 92 இலட்சம், 2023-2024ல் 214 கோடியே 54 இலட்சம்,

தற்போது upto Feb 2025 வரை, 2024-2025 ஆம் ஆண்டுக்கு ரூ.206.87 கோடி. Modernization செய்யப்பட்ட Showrooms 54; Modernization Value Rs.23.55 கோடி. “Pure Zari Authenticity Card” 23.10.2021 அன்று அறிமுகம் செய்யப்பட்டது. Pure Zari எதற்கு என்பது உங்களுக்குத் தெரியும். இந்த Zariல் Gold எவ்வளவு, Silver எவ்வளவு இருக்கிறது என்பதை அந்த அட்டையின்மூலம் சரியாகக் கொடுக்கும் விதமாக Authenticity Card அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இவையெல்லாம் சாதாரணமானவை அல்ல. “Privilege Card” 22.10.2024 அன்று அறிமுகம் செய்யப்பட்டது. இந்த Cardல் சேரும் புள்ளிகளுக்கு நிகரான மதிப்பிற்கு, Cooptex விற்பனை நிலையத்தில், துணிகள் வாங்கி கொள்ளலாம். நீங்கள் அதிகமாக துணிகள் வாங்கி மீண்டும் points வந்தால், அந்த pointsக்கு பணம் கொடுப்போம். அதற்கேற்ப நீங்கள் துணிகளை வாங்கிக்கொள்ளலாம். அதேபோல், “Handlooms of India” விற்பனை அங்காடி தமிழ்நாடு மற்றும் பிற மாநில கைத்தறி இரகங்களை, ஒரே இடத்தில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய, Handlooms of India Showroom, கோயம்புத்தூரில் 12.5.2023 அன்றும், சென்னையில் 17.12.2024 அன்றும் திறக்கப்பட்டன. Chennai, “Satya Jothi Sheltered Workshop for the Blind” நிறுவனத்தில், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் நெசவு செய்யநம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அங்கு பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கு நெசவுப் பயிற்சியளிக்க வேண்டுமென்று எங்களுக்கு முதல்முதலில் அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையில் உடனே நாங்கள் சென்று 10 கைத்தறிகளைப் புதுப்பித்து, அத்தறிகளில், Floor Mopக்கான துணி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. Cooptex மூலம் நூல் வழங்கப்பட்டு, இரகங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. மேலும், 5 தறிகள் நிறுவப்பட்டு, உற்பத்தி நடைபெற்று வருகிறது.

Handlooms Outreach Programme கல்லூரி மாணவர்களுக்கு கைத்தறி இரகங்களின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்தி, விற்பனையை அதிகரிக்க, Handlooms Outreach Programme 302 கல்லூரிகளில் நடத்தப்பட்டது. ரூபாய் 3 கோடியே 72 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளது. அனைத்துக் கல்லூரிகளுக்கும் நாங்களே துணியைக் கொண்டு சென்று விற்கிறோம். Cooptex Employees Pay Revision

1.7.2023 முதல் 15% ஊதிய உயர்வு வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 25.1.2025 அன்று ஆணை வெளியிடப்பட்டது. கழக ஆட்சியில் தற்போது வழங்கப்பட்ட ஊதிய உயர்வு, இதுவரை வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் அதிகபட்ச உயர்வாகும். அரசு ஊழியர்களுக்கு இணையாக HRA & CCA வழங்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஊதிய விகிதம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது இதுதான் first time. தளபதி அவர்களுடைய ஆட்சியில்தான் நடைபெற்றிருக்கிறது. 421 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். இது திராவிட மாடல் அரசின் சாதனை ஆகும்.

துணிநூல். ஜவுளி தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், Textile Departmentஇந்த துணிநூல் department இதற்கு முன்னர் Handlooms உடன் ஒன்றாக இருந்தது. இப்போது Textile Department தனியாக உருவாக்கப்பட்டு

23102021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது. ஜவுளி தொழில் முனைவோர்களின் கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு மீதான 1% Market Cess வரியினை நீக்கி, 13.9.2021 அன்று ஆணையிட்டுள்ளார். பஞ்சு, நூல் விலை கட்டுப்படுத்தியது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால், 11% Import Duty on Cotton, 31.10.2022 வரையும் ஒன்றிய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், Extra Long Staple (ELS) Cotton பஞ்சு இறக்குமதிக்கு மட்டும் 11% Import Duty 20.2.2024 முதல் ஒன்றிய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால், 11% Import Duty on Cotton, 31.10.2022 வரை ஒன்றிய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டது. இதற்காக அவர்கள் எத்தனை முறை டெல்லிக்கு phone செய்திருக்கிறார்கள், எத்தனை letter எழுதியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். மேலும், Extra Long Staple (ELS) Cotton இறக்குமதிக்கு மட்டும் 11% Import Duty 20.2.2024 முதல் ஒன்றிய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்